**எம்பிலிபிடிய நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 24 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 23,000,000 மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 5,497,843 கிரயமான வேலைகள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த வேலைகளின் கிரயம் மூலதனமாகக்கப்பட வேண்டும். | குறித்த வேலைகளை மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் இயந்திங்கள் மற்றும் இயந்தி உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,577,685 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இயந்திங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 03 செலவு விடயங்களிற்குரிய மீண்டுவரும் செலவு ரூபா 538,034 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண சபை ஒதுக்கீட்டினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 07 வேலைகளிற்குரிய கிடைக்க வேண்டிய மற்றும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,801,015 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீட்டு ரீதியான குறிப்பீட்டுத் தவறொன்று ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 111,033 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டியினை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்தான பங்களிப்பு கணக்கு மீதி மற்றும் நிலையான சொத்து மீதிக்கிடையில் ரூபா 2,658,780 ஆன வித்தியாசம் நிலவியது. | நடைமுறை அல்லாத சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்தான பங்களிப்பு கணக்கு மீதியை இணக்கச் செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 2007 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 400,725 ஆன முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தரப்பினர் அறிவூட்டப்பட்டிருந்த போதும், முற்பணத்தை தீர்த்துக் கொள்ள இயலாதுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | (i) 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க | சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் எரிபொருள் | குறித்த வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 3.1 பந்தி | . | நுகர்வுப் பரிசோதனை மேற்கொளள்ப்பட வேண்டும். | துரிதமாக மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினால் வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை. | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய சுட்டிகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன்.. |
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய் 2018/இ-உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 27,453,244 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 25,500,993 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 17,958,000 | 18,301,926 | 14,249,837 | 44,848,833 | 18,056,000 | 17,749,272 | 17,749,272 | 41,072,688 |
| (ii) | வாடகை | 21,540,500 | 17,863,155 | 16,738,903 | 9,889,337 | 14,252,200 | 15,312,341 | 15,312,344 | 8,270,985 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,582,000 | 3,044,889 | 2,412,339 | 201,500 | 2,022,800 | 2,523,479 | 2,523,479 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,891,700 | 19,024,056 | 33,892,664 | 4,569,928 | 11,019,700 | 13,285,992 | 13,285,992 | 7,497,459 |
| | | 59,972,200 | 58,234,026 | 67,293,743 | 59,509,598 | 45,350,700 | 48,871,084 | 48,871,087 | 56,841,132 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 44,848,833 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 05 வருடங்களை விஞ்சிய காலமாக நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 38,807,096 காணப்பட்டது. அந் நிலுவையை அறவிட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170 பிரிவின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுததிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வரி தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,194,281 ஆன பொதுச் சந்தை நிலுவை கடைவாடகை மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் ரூபா 2,354,625 உள்ளடங்கியிருந்தது. அந் நிலுவையை அறவிட சபை போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட முடியாத நிலுவை வருமானம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,451,402 பேரூந்து தரிப்பிட நிலுவை கடைவாடகை மற்றும் ரூபா 3,374,350 ஆன வியாபார பிரதேச நிலுவை வாடகையை அறவிட சபையிற்கு இயலாதிருந்தது. | அறவிட முடியாத நிலுவை வருமானம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை கடைவாடகை செலுத்தாத கடைகளை முத்திரை இடுவதாக அறிவூட்டிய பின் மாதாந்தம் ரூபா 10,000 வீதம் நிலுவையை தீர்க்க உடன்பட்டுள்ளதாகவும் அதன் படி ஒரு மாத நிலுவை கடைவாடகை அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டு திட்டத்தில் உள்ளடங்கிய 44 அபிவிருத்தி செயற்பாடுகளில் 18 இனை நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், திட்டத்திற்கு உட்படுத்தப்படாத கூட்டுத் தொகை ரூபா 26,255,324 ஆன 28 அபிவிருத்தி செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டினை பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்த வேண்டும். | வருடாந்த பாதீட்டிற்காக மக்கள் பிரதி நிதிகளால் தரப்படும் அபிவிருத்தி உத்தேசங்கள் மகா சபையில் மாற்றப்பட்டு வேறு உத்தேசங்கள் அதற்கு பதிலாக பெயரிடப்பட்டு செயற்படுத்துவதை அங்கீகரிப்பதாகவும் எதிர்காலத்தில் இது தொடர்பாக உரிய மக்கள் பிரதி நிதிகளை அறிவூட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 திசெம்பர் வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | 2020 ஆண்டிற்காக திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

#### ஊழியர் வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 18 வாகனங்கள் இருந்த போதும், அங்கீகரிக்கப்பட்ட சாரதி எண்ணிக்கை 06 ஆகும். சபையின் தேவைக்கு | சபையின் தேவைக்கு ஏற்றவாறு பதவி எண்ணிக்கையை அங்கீகரித்துக் | இது தொடர்பாக செயற்பட்ட போதும் சாரதி எண்ணிக்கை அங்கீகரிக்கப்படாததால் |

| | | |
|---|---|---|
| ஏற்றவாறு பதவி எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்ளாததால் தொழிலாளர் பதவிகளிற்கு ஆட்சேர்க்கப்பட்ட 06 நபர்கள் சாரதி பதவி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மற்றும் கடமைகளை கட்டாயம் மேற்கொள்ள வேண்டியதால் தொழிலாளர்களை யேனும் ஈடுபடுத்தி அக்கடமைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இனங்காணப்பட்ட அனுமதியற்ற 35 நிர்மாணங்களில் 32 இற்கு 07 நாட்களில் அகற்றுமாறு உரிய தரப்பினருக்கு எழுத்து மூலம் மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. அகற்றப்படாத அனுமதியற்ற நிரமாணங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதை சபை மறுத்திருந்தது. | அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காணல், அவற்றை அகற்றுதல் அல்லது சட்டரீதியாக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானத்துடன் இணங்குகிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதியப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 34,773,350 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | சொத்துக்கள் பதிவேட்டை சரியாக நாளாதுவரையாக பேணிச் செல்ல விடைய பொறுப்பு உத்தியோகத்தரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கழிவகற்றும் பவுசர் 2016 செப்தம்பர் முதல் செயலிழந்து நிலவிய போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் பழுதுபார்க்கப்பட்டிருக்காததுடன், அதன் உரிமையை சபைக்கு சுவீகரித்துக் கொள்ளவும் இயலாதிருந்தது. | உரிமை பற்றிய பிரச்சினையை தீர்த்துக் கொண்டு பழுதுபார்க்க அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பவுசரின் பதிவு உரிமையாளரை கண்டறிய முடியாதுள்ளதாகவும், இந்த பவுசரிற்கு உரிய உதிரிப்பாகங்கள் பற்றாக்குறை ஆகையால் பழுதுபார்த்தலும் கடினமானது என அறிவிக்கிறேன். |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை வளவு, வாராந்த சந்தை வளவு மற்றும் குப்பை கொட்டிலின் பாதுகாப்பு நடவடிக்கை பொறுப்பு அதிகாரியினால் 2018 செப்தம்பர் முதல் 2019 மே வரையான காலத்தினுள் இரவு நேர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காத நிலையில் அந் நடவடிக்கைகளுக்காக ரூபா 262,493 செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக செலுத்தப்பட்ட தொகையை மீண்டும் அறவிட வேண்டும். | உடன்படிக்கை பிணை வைப்பிலிருந்து அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3.6 பெறுகை

### ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மகநெகும கிராம அபிவிருத்தி வேலைத் திட்டம் 2010 கீழ் கிடைத்த ரூபா 2,500,000 ஒதுக்கீட்டின் மீது எம்பிலிபிடிய ஜனாதிபதி வித்தியாலய முன்பக்க பாதையை 05 கட்டங்களில் அபிவிருத்தி செய்ய கமநல சங்கமொன்றுடன் 2010 ஜுன் 24 திகதி உடன்பட்டு கூட்டுத் தொகை 531,567 முற்பணமாக சபை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. உரிய நிர்மாணங்கள் நியம அளவுகளிற்கு மாற்றமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததால் மேல் வேலைத்திட்டத்தின் கீழ் நகர சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த பணம் கிடைக்காததால் செலுத்தப்பட்ட முற்பணத்தை தீர்த்துக் கொள்ள முடியாதிருந்தது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை தீர்த்துக் கொள்ள முடியவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஆ) | மதிப்பீட்டு கிரயம் ரூபா 1,336,411 ஆன கொடிகந்த இரண்டாம் ஒழுங்கை கொன்கிரீட் இடும் வேலையில் மேற்கொள்ளப்படாத வேலைகளிற்காக ரூபா 57,506 செலுத்தப்பட்டிருந்தது. | மிகை செலுத்தல் அறவிடப்பட வேண்டும். | மிகை செலுத்தலை மீள் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**தீர்க்கப்படாத அவதானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எம்பிலிபிடிய நகர மத்தியிலுள்ள மணிக்கூட்டு கோபுர மணிக்கூட்டை பழுதுபார்க்க பெறுகை நடைமுறைகளுக்கு மாற்றமாக ரூபா 247,640 மதிப்பீட்டு கிரயத்திற்கு நபர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எழுத்து மூல உடன்படிக்கை அல்லது காப்பொன்று இல்லாது 2017 மே 05 திகதி ரூபா 150,000 முற்பணம் வழங்கியிருந்த போதும், பழுதுபார்த்தல் ஒழுங்காக மேற்கொள்ளப்படாததால் மணிக்கூடு செயலற்று காணப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | எம்பிலிபிடிய பேருந்து தரிப்பிடத்திலிருந்து 2014 ஆண்டு முதல் பஸ் வண்டி தரிப்பிட கட்டணம் அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரயாணிகள் போக்கு வரத்து அதிகார சபையுடன் ஏற்பட்ட பிரச்சினையின் மீது வருமானம் இழக்கப்பட்டதாகவும் தற்போது அவ் வருமானத்தை அறவிட நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | நிலுவை வீதவரி அறவிடும் அலுவலருக்கு 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ரூபா 237,012 ஆன தரகுக் கட்டணம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 142,743 தொகை மீள் அறவிட வேண்டியதாக நிலவியது. | மேலதிக கொடுப்பனவுத் தொகையை துரிதமாக அறவிட வேண்டும். | திரு. வீ.லொக்குவிதான விற்கு கொடுப்பனவு செய்துள்ள மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கான இறுதி அறிவித்தலும் விடப்பட்ட போதும் இது வரை அக் கொடுப்பனவை அவர் புறக்கணிப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | வீதவரி அறவிட சபை அதிகார எல்லையிலுள்ள அனைத்து நிலையான சொததுக்களும் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிட வேண்டிய போதும், 2012 ஆண்டின் பின்னர் சொத்து மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | இதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு பல முறைகள் எழுத்து மூலம் கோரியுள்ளதாகவும், அதன் பிரகாரம் வீதவரி மதிப்பீட்டை எதிர் காலத்தில் மேற்கொள்ள பொறுப்பேற்றுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |